தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## பாகம் - 2





**2022 ஏப்ரல் 14, தமிழ்ப்புத்தாண்டு நன்னாளில் நம் விஸ்கான்சின் மகாணத்தின் ஆளுநர் திரு.டோனி இவர்ஸ் அவர்கள் தமிழ் புத்தாண்டை கொண்டாட அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

STATE *of* WISCONSIN

OFFICE *of the* GOVERNOR

# *Proclamation*

*WHEREAS;* Tamil is one of four main languages spoken by people in South India, as well as by many Wisconsin families across our state, and is one of the longest-surviving classical languages in the world; and

*WHEREAS;* Puthandu, also known as Puthuvarudam or Tamil New Year, is the first day of year on the Tamil calendar and is traditionally celebrated as a festival; and

*WHEREAS;* the date of the festival is set with the solar cycle of the lunisolar calendar as the first day of the Tamil month Chithirai, which falls on or about April 14 every year on the Gregorian calendar; and

*WHEREAS;* on this occasion, Tamil people greet one another by saying "Puthāaṇdu vāazhthugal!" (புத்தாண்டு வாழ்த்துக்கள்) or "Iṉiya puthaandu nalvāazhthugal!" (இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்), which translate to "Happy New Year" in English; and

*WHEREAS;* today, the state of Wisconsin celebrates the contributions of the Tamil people in our state and around the world and wishes a happy new year to all who celebrate;

*NOW, THEREFORE,* I, Tony Evers, Governor of the State of Wisconsin, do hereby proclaim April 14, 2022, as

## TAMIL NEW YEAR

throughout the State of Wisconsin and I commend this observance to all our state's residents.

IN TESTIMONY WHEREOF, I have hereunto set my hand and caused the Great Seal of the State of Wisconsin to be affixed. Done at the Capitol in the City of Madison this 12th day of April 2022.

Tony Evers
TONY EVERS
GOVERNOR

By the Governor:

Douglas La Follette
DOUGLAS LA FOLLETTE
Secretary of State

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

WITS
# செய்தி மடல்
# தமிழ் ஊற்று

**நமது விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம் உருவெடுத்த அன்று முதல் இன்று வரை வழிநடத்திய தலைவர்கள்**

தடம் பதித்த தலைவர்கள்

2003-2004 நமசிவாயம் மகேந்திரன்

2005-2006 சக்திவேல் பிரபாகரன்

2007-2008 ஜான்சிராணி பிரபாகரன்

2009-2010 விஜயா ஆர்.ராமன்

2011-2012 கோபால கிருஷ்ணன்

2013-2014 ஜெயராம் சதாசிவம்

2015-2016 மனோ மோகன்ராம்

2017-2018 கொர்நெலியஸ் சுகுமார் ரத்னம்

2019-2021 கார்த்திக் நடராஜன்

2022-2023 பவானி தினகரன்

# விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம் உருவாகிய கதை

த
லை
வ
ர்
க
ள்
அ
றி
வோ
மா?

**நமது விஸ்கான்சின் தமிழ் சங்கத்தின் முதல் தலைவர் திரு.நமச்சிவாயம் மகேந்திரன் அவர்கள் நம் தமிழ்ச்சங்கம் உருவாகிய கதை பற்றி நம்மிடையே பகிர்கிறார்.**

2002ம் ஆண்டு பிறந்த காலம் பொதுவாக நேரம் கிடைக்கும் ஒவ்வொரு வார இறுதியிலும் சில தமிழ் குடும்பங்கள் ஒரு வீட்டில் ஒன்று கூடி சனிக்கிழமை இரவு நேரத்தை கழிப்பது வழக்கம். அத் தருனத்தில் தான் திரு.பிராபாகரனுக்கு ஒரு தமிழ் சங்கத்தை உருவாக்கும் எண்ணம் உருவாகியது.

இது மேடிசனில் வாழும் தமழ் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியையும், கலாச்சாரத்தையும் அறிமுக படுத்த உதவி செய்யும் என்ற எண்ணத்துடன் உருவாகியது.

10 உறுப்பினர்கள் கொண்ட தமிழ் சங்கமாக முதலில் உருவாகியது. என்னை தலைவராக நியமித்தார்கள். 10 உறுப்பினர்களும் ஒன்று கூடி ஒவ்வொருவரும் $150 முதலீடு செய்து சங்கத்தை தொடங்கி வைத்தோம்.

முதல் சங்க விழா மேடிசன் மெமோரியல் உயர்தர பள்ளியில் கார்த்திகை 9ம் தேதி சனிக்கிழமை நடைபெற்றது. அன்று திரு.ஐயங்கரன் குழு வந்து பாடி எல்லோரையும் மகிழ்வித்தார்கள்.

2003ம் ஆண்டு 6 ஆசிரியர்களையும், 32 மாணவர்களையும் கொண்ட வள்ளுவர் தமிழ்பாடசாலை உருவாகியது. தற்போது பாடசாலை சுதந்திரமாக இயங்கி வருகிறது.

தொடர்ந்து சங்கத்திற்கு, புதிதாக மேடிசன் வரும் குடும்பங்களுக்கும் பலவழிகளில் உதவிகளை செய்து இருக்கிறோம். இன்று தமிழ் சங்கம் 20 வருடங்களாக வளர்ந்து நிற்கிறது. தொடர்ந்து 50 வருடத்தை கடக்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

**திரு.நமசிவாயம் மகேந்திரன்**

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

WITS செய்தி மடல்

தமிழ் ஊற்று

# அமெரிக்காவின் முதல் பெண் வேதியல் முனைவர் : திருமதி.லக்ஷ்மி ஸ்ரீதரன்

மேடிசனில் தமிழர் சாதனை





ஜனவரி 1972 இல், கேபிடல் டைம்ஸ் நிருபர் ஒருவரிடமிருந்து அவரை நேர்காணல் செய்ய தொலைபேசி அழைப்பு வந்த அந்த தருணத்தில்தான் விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தில் நீர் வேதியியல், குடிமுறை மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் ஆகியவற்றில் முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண்மணியான அவர், தனது வாழ்வின் சாதனைகளை உணரத்துவங்கினர்.

அன்றைய நாளில், பல "முதல்" தகுதிக்கு சொந்தமானவர் அவர் - தனது பாரம்பரிய தென்னிந்திய குடும்பத்தில் கல்லூரி சென்ற முதல் பெண்மணி; குடும்பத்தின் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம் பெற்ற முதல் பெண் பட்டதாரி; மேற்படிப்புக்காக வெளிநாடு வரை சென்ற முதல் பெண் என்ற பெருமையும் அவருக்கு உண்டு. இன்று அமெரிக்காவிலேயே நீர் வேதியியலில் முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண்ணாகவும் அவரை உங்களுக்கு அறிமுகம் செய்வதில் மிகுந்த மகிழ்ச்சிகொள்கிறது நமது விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம். மேடிசன் நகர் வாழ் மக்களுக்கு இவரின் அறிமுகமே தேவையில்லை என்பதே நிதர்சனம். அவர் தான் நாகைத்துறைமுகத்திலே பிறந்து மேடிசனில் வாழ்ந்துகொண்டிருக்கும் திருமதி லக்ஷ்மி ஸ்ரீதரன் அவர்கள்.

தன் வாழ்வின் இன்றைய நிலைக்கும் தனது பல வெற்றிகளுக்கும் வித்திட்டது தான் கடந்து வந்த பாதை தான் என்று பெரும் நம்பிக்கையுடன் தனது கதையை நம்மோடு பகிர்கிறார் நம் லக்ஷ்மி அம்மா.

"தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினத்து துறைமுகத்தில் தமிழ் பாரம்பரியம்மிகுந்த எளிமையான குடும்பத்தில் தலைமகளாய் பிறந்த நான் எனது முதுகலை பட்டம் பெற்றதும் 1966-ல் முனைவர் படிப்பிற்காய் அமெரிக்கா வந்தேன். நானும் என் கணவர் ஸ்ரீதரும் பல்கலைக்கழக வளாகத்தில் சந்தித்தோம், இரண்டு வருடங்கள் கழித்து நாங்கள் திருமணம் செய்துகொண்டோம். எங்கள் புதிதாகப் பிறந்த மகள் அஞ்சலியை கவனித்துக் கொண்டே நான் அங்கு எனது முனைவர் படிப்பின் ஆய்வறிக்கையை எழுதினேன்.

எனது இரண்டு வருட ஆய்வுப் பணியின்போது "நீர் தர மேம்பாடு" எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரைகளை வழங்கியுள்ளேன். பிறகு வளாகத்திற்கு வெளியே வேலை தேட வேண்டியிருந்தது. 60 களின் பிற்பகுதியும் 70 களிலும் அமெரிக்காவில் பல கிளர்ச்சிகளும் புரட்சிகளும் வெடித்த காலகட்டங்கள். வியட்நாம் போர் எதிர்ப்பு; வளாகத்தில் அமைதியின்மை; பெண்கள் விடுதலை இயக்கம், சம உரிமைகள் சட்ட அமலாக்கம் மற்றும் பல பெருந்தலைவர்கள் படுகொலைகள் - அனைத்தும் எங்கள் வாழ்க்கையின் முதல் தசாப்தத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

அமெரிக்காவில் , அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று எண்ணிய அன்றைய நாட்களில் முட்டி மோதி பட்டம் பெற்றாலும் அதிக வேலை வாய்ப்புகள் கிட்டியதில்லை. அது மட்டும் அன்றி மேலை நாடுகளுக்கு புலம்





பெயர்ந்த என்னைப்போன்றோருக்கு குழந்தையையும் கவனித்துக்கொண்டு வேலையும் தேட வேண்டும் என்று இன்னும் கடினமாகவே இருந்தது. இவற்றையெல்லாம் கடந்து எனக்கு விஸ்கான்சின் மாநில சுற்றுச்சூழல் ஒழுங்குமுறைத் துறையில் (DNR) வேலை கிடைத்தது. எனது முதல் வேலை என் படிப்புக்கு ஈடானதாய் இல்லை எனினும் எனது கடின உழைப்பால் முன்னேறி விஸ்கான்சின் மாகாணத்தின் திடக்கழிவு மேலாளராய் பதவிவகித்ததோடு நில்லாமல் இறுதியில் அதே துறையின் (DNR) துணை மண்டல இயக்குனராகவும் பொறுப்பேற்றேன்.

மேடிசனின் நல்ல சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, நட்பான குடிமக்கள் மற்றும் அரசின் தாராளமயக் கொள்கைகள் காரணமாக, ஸ்ரீதரும் நானும் அதை நிரந்தர இல்லமாக மாற்றத் தேர்ந்தெடுத்தோம். இன்று வரை ஆனந்தமாய் எங்கள் வாழ்வை மெடிசனில் தொடர்ந்துகொண்டிருக்கிறோம்.

**எனதுகுடும்பமும்கலாச்சாரமும்:**
எனது அலுவல் பணி, சமூகப்பணி மேலோங்கி இருந்தாலும் அவற்றுக்கு இணையாய் எனது குடும்பப்பணியும் என்னை அழகே மெருகேற்றின. எங்கள் மகளின் இளமைபருவம், இந்தியாவில் உள்ள எங்கள் குடும்பத்தைச் சென்று சந்திப்பது என அனைத்தையும் அழகாய் அரங்கேற்றினோம். இன்றுபோல் அலைபேசிகள், கட்செவி அஞ்சல், காயலை, காணொளி அழைப்புகள் இல்லாத காலகட்டத்திலும் விமான கட்டணங்கள் கணிசமாய் உயர்ந்துஇருப்பினும் எங்கள் இந்திய குடும்பத்துடன் தொடர்பில் இருப்பதில் கூடுதல் முயற்சிகள் மேற்கொண்டோம். எனது குடும்பம் அமெரிக்க கலாச்சாரத்தை ஏற்றுக்கொண்டாலும், நாங்கள் வளர்ந்த கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய மரபுகளையும் தொடர்ந்து பின்பற்றியதோடு எனது மகளுக்கும் கற்றுக்கொடுத்தோம்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த கலைஞர்கள் மற்றும் பல பிரமுகர்களை நாங்கள் ஆதரித்து விருந்தளித்தோம். தமிழக முன்னாள் முதல்வர் திரு எம்.ஜி.ராமச்சந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு இரா செழியன் , எழுத்தாளர்கள் திரு மணியன், திரு நாடோடி, திரு ஆர்.கே. நாராயண் மற்றும் பல பாரம்பரிய இசைக்கலைஞர்கள் எங்கள் இல்லத்திற்கு வந்து அவர்களுக்கு விருந்தளித்தது இன்றும் பசுமரத்தாணிபோல் என்நெஞ்சில் நீங்காமல் நிழலாடுகிறது.

**குடிமைப்பொறுப்புகள்:**
மாநில நிறுவனங்களில்(DNR) பணிபுரிவது எனக்கு ஒரு கண் திறப்பாக இருந்தது. நான் இதுவரை கண்ட பல்கலைக்கழக உலகம் விஸ்கான்சின் சமூகத்தின் மிகச் சிறிய பகுதி என்பதை உணர்ந்தேன், மேலும் உண்மையிலேயே ஒரு அமெரிக்க குடிமகனாக ஆவதற்கு எனது எல்லையை விரிவுபடுத்த வேண்டும் என தீர்மானித்தேன். அமெரிக்க ஜனநாயகம் ஒரு பங்கேற்பு அரசாங்கமாகும். நாம் எவ்வளவு அதிகமாக பங்கேற்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அரசாங்கத்தின் செயல்பாடுகளை நாம்

புரிந்துகொள்கிறோம், மேலும் அதிலிருந்து நாம் அதிகம் பயனடைகிறோம். எனவே, ஆசிய அமெரிக்கர்களுக்கான விஸ்கான்சின் அமைப்பு, விஸ்கான்சின் சிறுபான்மைப் பெண்கள் அமைப்பு போன்ற இந்தியர் அல்லாத அமைப்புகளைப் பற்றி அறிந்து கொண்டு அவற்றின் செயற்குழுக்களிலும் இன்றுவரை முதன்மை பங்குவகித்துவருகிறேன் . அமெரிக்க வாழ் இந்தியர்கள் சங்கத்தின் தலைவி என்ற முறையில், நமது சமூகத்தையும், அதன் கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தும் வகையில் இந்தியர் தினம் கொண்டாட வழி செய்தேன். அத்தகைய நமது நிகழ்வுகளுக்கு இங்குள்ள அரசியல் பிரமுகர்களை வரவழைத்து அவர்களுக்கு நமது சமூகத்தின் நிலையை அறியச்செய்தேன். 2017-ல் கடந்த 50 ஆண்டுகளில் விஸ்கான்சினில் உள்ள இந்தியர்களின் சாதனைகளை பட்டியலிடும் நூலக நிகழ்வு "நமஸ்த்தே மேடிசன்" அரேங்கேற்றியதில் இன்றும் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்.

இது போன்ற எனது வாழ்வின் பல வெற்றிகளுக்கு பெரிதும் துணை நின்றது, அன்று முதல் இன்று வரை துணை நிற்பது எனது கணவர் திரு ஶ்ரீதரின் பேராதரவும், ஊக்கமமுமேயாகும். அதுமட்டுமல்ல எனது பெற்றோரின் ஆசியும் ஆதரவும் மற்றும் எனது மகளின் ஒத்துழைப்புமன்றி என் வாழ்வின் கனவு நிஜமாயிருக்காது.

இன்றும் மேடிஸனில் குடியேறும் பல இந்திய குடும்பங்கள் தங்கள் கலாச்சாரத்தை பேணுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுவதைக் கண்டு நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். அதற்கு துணைநிற்கும் விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்புகளுக்கு எனது நன்றிகள் பல"

தன் வாழ்க்கைக் கதையை நம்மோடு உருக்கமாய் பகிர்ந்த லக்ஷ்மி அம்மா,

"மங்கையா ராகப் பிறப்பதற்கே – நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா
பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ – இந்தப்
பாரில் அறங்கள் வளரும், அம்மா"

என்ற கவிமணியின் கூற்றுக்கிணங்க வாழ்ந்து வருகிறார் என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

WITS செய்தி மடல்

தமிழ் ஊற்று

# ஆண்டவர்களின் அரசன் இராஜராஜன் - பாகம் 2

தொடர்கதை பக்கம்

புலி வலிமை உடைய காட்டு விலங்குதான், என்றென்றும் அதனிடம் இரக்க குணம் இருப்பதில்லை. பசி இல்லை என்றாலும், அது மற்ற விலங்குகளை வேட்டையாட தயங்குவதில்லை. எனவேதான் காட்டின் விலங்கின எண்ணிக்கையை வேண்டுமானால், புலியின் கணக்கீட்டை வைத்து, கணக்கிடலாமே அன்றி அதனை காட்டின் அரசன் என்று நாம் ஏற்றுக் கொள்வதில்லை.

மேற்கூறியபடி, தமிழ்நாட்டை பல அரசர்கள் ஆண்டு இருந்தாலும், இராஜராஜனின் ஆட்சி ஓர் அளவு கோலாக உள்ளது. மேலும் காலத்தைக் கடந்து நிற்கும். இராஜராஜனது கோவில்களும், கல் வெட்டுகளும், மக்கள் நலத்திட்டங்களும் அவனை ஒரு சிறந்த தமிழ் மன்னனாக காட்டுகின்றன. மற்றும் தமிழ் மன்னர்களின் புகழுக்கு இராஜராஜன் ஒரு குறியீடாக உள்ளார். “இராஜராஜனின் ஆட்சி மிகவும் சிறந்தது” என்று கூறப்படும்போது, அது அன்றைய சோழ தேசத்து மக்கள், விவசாயிகள், உழைப்பாளர்கள் என்று அனைவருக்கும் பங்கு உண்டு. நமது முன்னோர்களுக்கான போற்றுதல் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

# தொடர் கதை பக்கம்

இராஜராஜனை காட்டிலும் அவரது மகனான இராஜேந்திரன், தனது போர் வெற்றிகளாக இருப்பினும், ஆட்சிப் பரப்பின் அளவிலாகட்டும் அதிகமாக இருப்பினும், மக்கள் தன்னை விடவும், தனது தந்தையே மேலான அரசனாக நினைக்க வேண்டும் என்கிற எண்ணம் இருந்தது. இதற்கு மற்றுமொரு எடுத்துக்காடடு உள்ளது இராஜராஜனது தஞ்சை பெரியகோவில் தமிழர்களது கட்டுமான கலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக இன்றளவும் உள்ளது. ஆனால் இராஜேந்திரனது கங்கை கொண்ட சோழபுரம் கோவில் மட்டும் அகலத்திற்கேற்ற உயரம் அல்ல. அதன் அடித்தளம் அமைக்கப்பட்டபோது திட்டமிடப்பட்டிருந்த விமானத்தின் உயரமும், பின்னர் கட்டி முடிக்கப்பட்ட விமானத்தின் உயரமும் வேறானவை. கோவிலின் அடித்தள வேலைகள் முடித்தபின்னர்தான், இராஜேந்திரன் தனது கோவில் தனது தந்தை இராஜராஜனின் கோவிலை விடவும் உயரமாக இருக்க கூடாது என்று எண்ணி கங்கை கொண்ட சோழபுரத்தின் உயரம் தஞ்சை பெரிய கோவிலைக் காட்டிலும் உயரத்தில் குறைந்தே இருக்க வேண்டும் என்று முடிக்கப்பட்டது. பிற்காலத்தில் தோன்றிய சோழ மன்னர்களும், இராஜராஜனை ஓர் இலக்கணமாகவே பார்த்தார்கள். இராஜராஜன் வெளியிட்ட நாணயங்களையே மற்ற சோழ மன்னர்களும் வெளியிட்டார்கள். அன்னாரது ஆட்சி முறையையே மற்ற மன்னர்களும் பின்பற்றி நடந்தார்கள். எனவே, மேற்கூறிய தகவல்களால் இராஜராஜன் ஓர் ஒப்பற்ற சோழர்கால மன்னன் என்பதனை எடுத்துக்காட்டுகிறது என்பதனால் இராஜராஜன் என்கிற சோழர்கால மன்னைப் பற்றி விபரமாக அறிந்து கொள்வோம்.

*தொடரும்...*


# இஞ்சித் துவையல்

சமைக்களாம் வாங்க

## இஞ்சித் துவையல்

### தேவையான பொருட்கள்:

இஞ்சி நறுக்கியது – 1/2 கப்
உளுந்து – 2 மேஜைக்கரண்டி
பெருங்காயம் – 1 தேக்கரண்டி
புலி – சிறிதளவு
வெல்லம் – சிறிதளவு
எண்ணெய் – 1 தேக்கரண்டி
உப்பு தேவைக்கேற்ப



### இஞ்சித் துவையல் செய்முறை:

இஞ்சியை தோல் சீவி நறுக்கிக்கொள்ளவும். ஒரு கடாயில் எண்ணெய் விட்டு உளுத்தம் பருப்பு, பெருங்காயம், மிளகாய் வற்றல் பொன்னிறமாகும் வரை வறுக்கவும். அதில் நறுக்கிய இஞ்சி சேர்த்து மிதமான தீயில் வதக்கவும். சிறிது நேரம் ஆறவைக்கவும். ஆறியவுடன் ஒரு மிக்ஸியில் வெல்லம் சிறிது தண்ணீர் சேர்த்து கரகரப்பாக அரைக்கவும். உப்பு, புளியையும் சேர்த்து அரைக்கவும். சுவையான இஞ்சி துவையல் தயார். இதை சூடான சாதத்தில் நெய் சேர்த்து பிசைந்து சாப்பிடவும். இஞ்சி துவையல் பசியை தூண்டும் ஜீரண சக்தியை அதிகரிக்கும்.

பெயர்: இரஞ்சனி

# ரெயீனிஸ் ஐயர் தெரு

*ஆசிரியர்: வண்ணநிலவன்* *அன்புடன்: ஆண்டனி*

புத்தகப் பரிந்துரை

பொழுது போகாம இருக்கும் போது அப்படியே திண்ணையில உக்காந்து தெருவ பார்த்துகிட்டே இருக்கிற ஒரு சந்தோஷம் இருக்கும் பாருங்க அந்த சந்தோஷம் தான் இந்த நாவலை வாசிக்கும் போது எனக்கும் கிடைத்தது. ஆள் நடமாட்டமே இல்லாத தெருவுல நாம் உக்காந்து இருந்தா கூட அந்த தெருவுல முன்னாடி இருந்த ஆட்கள், நடந்த சம்பவங்கள் எல்லாம் தானாகவே நினைவுக்கு வரும். சில நிமிடம் கண் மூடி உக்காந்தா அந்த தெருவில் நாம் பார்த்து பழகிய மனிதர்கள் அனைவரும் நம் முன்னால் வந்து செல்வது போல் இருக்கும்.

நினைவுகள் எப்பவுமே பொக்கிஷம் தான். சில நினைவுகள் நமக்கு சந்தோஷத்தை தரலாம் சில நம்மை அழ வைக்கலாம் எதுவாக இருந்தாலும் நினைவுகள் தான் பல வேளைகளில் நம்மை இயக்கும் எரி பொருள். நிகழ்கால நிகழ்வுகளை விட இந்த கதையில் கதாபாத்திரங்களை கடந்த கால நினைவுகளை அசை போட வைத்திருக்கிறார் வண்ணநிலவன்.

அம்மாவை இழந்து விட்டு பெரியம்மா வீட்டில் வளரும் டாரத்தி என்ற சிறுமியின் பார்வையில் ஆரம்பிக்கிறது கதை. தாய் இல்லாமல் அடுத்தவர் வீட்டில் வளரும் ஒரு சிறு குழந்தையின் குழப்பமான மன நிலையும்,குழந்தைத் தனமான எண்ணங்களும் நம்மை ரெயினீஸ் ஐயர் தெருவுக்குள் இழுத்து செல்கிறது.

இந்த கதையில் நம் மனதில் நிற்பவர் இருதய டீச்சர் தான். தன் ஆசை கணவன் சேசய்யா உடம்புக்கு முடியாமல் படுத்த படுக்கையாக இருக்கும் போதும் அவள் காட்டும் அந்த அளவுகடந்த பாசம், எதையும் எதிர்பார்க்காமல் அவனுக்கு செய்யும் பணிவிடை. சந்தோசமாக கணவனுடன் தான் கழித்த நாட்களை நினைத்துக் கொண்டு உருமாறி கிடக்கும் சேசய்யாவை அதே பாசத்துடன் "அதிகாரி, நான் உங்களை சாக விடமாட்டேன்" என தழுவிக் கொள்வதாகட்டும், நம் மனதை விட்டு நகல மறுக்கிறார். கிராம பேச்சு வழக்குகளில் பெண்கள் தங்கள் கணவனை/மகனை அதிகாரி என சொல்வதுண்டு. என்ன பெரும்பாலும், அழும் தருணங்களில் தான் இதெல்லாம் சாதாரணமாக வரும்.

குழந்தைகளை இழந்து விட்டு வாழும் பெற்றோருக்கு தெரியும் அவர்கள் எப்படி ஒரு ஜீவனற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என. குழந்தைகளின் இழப்பு பெற்றவர்களின் வாழ்க்கையில் பெரும் பகுதியை தன்னோடு எடுத்து சென்று விடுகிறது. இப்படி ஒரு இழப்பை தாங்கி வாழும் வயதான தம்பதியான ஆசீர்வாதம் பிள்ளை, ரெபேக்கா வின் வாழ்க்கை சுவர்கள் உடைந்த வீட்டுக்குள் ஒழுகும் மழைத்துளியில் நம்மையும் சில நிமிடம் நனைத்து செல்கிறது. இவர்களை பற்றி இந்த கதையில் வாசிக்கும் போது முடிந்தால் நாமும் தியோடர் போல ஏதாவது உதவலாம் என்று தோன்றுவது இயல்பு.

இந்த கதையில் சொல்லப்பட்டிருக்கும் ரெயினீஸ் ஐயர் தெரு மற்றும் கதை மாந்தர்களை பெரும்பாலான கிராமங்களில் நம்மால் பார்க்க முடியும். ஒரு மணி நேரத்தில் படித்து முடிக்க கூடிய கதைதான். நீங்களும் ரெயினீஸ் ஐயர் தெருவுக்கு சென்று அந்த அப்பாவி மனிதர்களை சந்தித்து விட்டு வாருங்கள்.

# நகைச்சுவை இமயம் பேராசிரியர் கண.சிற்சபேசன்

## இரங்கல் கவிதை

**விஸ்கான்சின் தமிழ்ச்சங்கத்தின் கடந்த பிப்ரவரி 2022 பொங்கல் விழா பட்டிமன்ற நடுவர் அய்யா திரு.கண.சிற்சபேசன் அவர்கள் கடந்த ஏப்ரல் 17ஆம் தேதி காலை சென்னையில் காலமானார்.**

**அவரது அழகிய தமிழும் நகைச்சுவை பேச்சும் இன்றும் நம் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அன்னாரது ஆத்மா சாந்தி அடைய நம் பிராத்தனைகளை உரித்தாக்குவோம்**



மூப்பில்லா தமிழே தாயே
பல வித்தகர்க்கு உனை படிப்பித்தவனை
உன் தலை மகனை மூப்பு தந்து
இறைவன் தன் வசம் இழுத்தாயோ!!

பட்டிமன்றம் பல கொண்டு
பட்டி தொட்டி மட்டும் அல்ல
பலத்தொலைக்காட்சிப் பெட்டியிலும்
தமிழகம் மட்டும் அல்ல
தன்னகம் தமிழ் கொண்ட மன்னவன் வாழும்
எம்மண்ணிலும் ..
அளவோடு அச்சில் ஏறும் ஏட்டிலும்
மடிமீது இணையம் ஏறும் கணினிக்காட்டிலும்
ஊர் கூடும் மேடையிலும்
உலகே கூடும் இணைய மேடையிலும்
நீ கொண்ட தேன் சுவையோடு
நோய் தீர்க்கும் நகைச்சுவையையும்
அளவின்றி நகலின்றி சுவைக்கச்செய்து
அழகாய் உனை மெருகேற்றியவனை
வின்னுலக மேடையிலே
விருந்து படைக்க விழைந்தாயோ !!

அழிவில்லா அழகே தமிழே!!
அணுஅணுவாய் உனைச் செதுக்கிய அறிஞர் பலரை
அருமையாய்ச்செதுக்கிய ஆசான் இவரே..
இறுதியிலே இவரோடு இணையத்திலே இணைந்தாலும்
இவர் தமிழை இறுதியாய்ச் சுவைக்கின்ற பெரும்பேறு பெற்றோமே ..
இந்த விஸ்கான்சின் தமிழ்ச்சங்க மக்களெல்லாம்
இவர் தமிழை இறுதியாய்ச் சுவைக்கின்ற பெரும்பேறு பெற்றோமே ..


உனை வளர்த்தே விடைபெற்ற இன்னுயிர் தான்
இன்று இறைவழி சேர்ந்ததென்று கண்ணீரில் கலங்கி நின்றோமே ..
நாங்கள் கண்ணீரில் கலங்கி நின்றோமே..

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## 2022 மெய்நிகர் பொங்கல் விழா ஒரு கண்ணோட்டம்



தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

**மெய்நிகர் பொங்கல் விழா போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு எமது வாழ்த்துக்கள்**

## பேச்சு போட்டி குழு A

*முதல் பரிசு*
சஷ்டிகா குரு

*இரண்டாம் பரிசு*
ஆஷிகா ஜெர்ஷினி

*மூன்றாம் பரிசு*
ஆஷிகா ஜெய்பிரவின்குமார்
தர்ஷீல் ரவிசங்கர்

*சிறப்பு பரிசு*
ஷ்ரவ்யா காஷ்யப்
வருணிக்கா ஜெயக்குமார்

## பேச்சு போட்டி குழு B

*முதல் பரிசு*
ஸ்நித்திக் குரு

*இரண்டாம் பரிசு*
ஜெசல் வெரோனிக்கா

*மூன்றாம் பரிசு*
ஹன்ஷிகா ஜெய்ப்ரவீண்குமார்
காவ்யா காஷ்யப்

## பேச்சு போட்டி குழு C

*முதல் பரிசு*
ரெயினா ரத்தினம்

*சிறப்பு பரிசு*
தேஜஸ்வினி மணிவண்ணன்

## குழு பாட்டு போட்டி

*முதல் பரிசு*
ஸ்ரீ ரஞ்சனி தீபக்

*இரண்டாம் பரிசு*
நிரஞ்சனா நம்பீசன்

*மூன்றாம் பரிசு*
தனிஷ் ராகவ்

*சிறப்பு பரிசு*
கதிர் விவேகானந்தன்
தருண் லக்ஷ்மன்





## பாட்டு போட்டி குழு B

*முதல் பரிசு*
ஸ்ரீநிதி தீபக்

*இரண்டாம் பரிசு*
ஜெசல் வெரோனிக்கா

## பாட்டு போட்டி குழு

*முதல் பரிசு*
சஷ்டிகா குரு ஸ்னிதிக் குரு

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## ரங்கோலி

| முதல் பரிசு | இரண்டாம் பரிசு | சிறப்பு பரிசு | சிறப்பு பரிசு |
|---|---|---|---|



வித்யா காமாக்ஷி
இந்திரா ஜோதி
பூர்ணிமா கிருஷ்ணமூர்த்தி



கவிதா மனோகரன்
சுஜாதா சங்கர்
ஜெய வீரமணி
ஷைனி சேவியர்
ஜோதிர்மயி விஷ்னுசேகர்



மாதுரி கொம்முரி
சில்பா கோலா
தரணி கனகலா



மகாகவினயா கணேசன்

## வண்ணம் தீட்டுதல்

### முதல் பரிசு



ரித்விக் திலக்



சித்தாரா



மானஸ்வி கருபாகுலா

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## வண்ணம் தீட்டுதல்

### இரண்டாம் பரிசு



தியூதி பத்ரிநாராயணன்



ஹேமந்த் கிரிஷ்

### மூன்றாம் பரிசு



மேக்னா அரோவிந்த்



திவ்யா விஜய்



ரிதன்யா ராஜசேகர்

## ஓவியம் குழு A

### முதல் பரிசு



சஷ்டிகா குரு



நித்திலா ராஜராஜன்



ஸ்மிருதி விஜய்

### இரண்டாம் பரிசு



ஸ்ரீநிதா சுதர்ஷன்



தருண் லக்ஷ்மன்

### மூன்றாம் பரிசு



கதிர் விவேகானந்தன்



சாய் கிரிஷ்

## ஓவியம் குழு B

### முதல் பரிசு



ஜெய ரித்திஷா திலக்

### இரண்டாம் பரிசு



சஜின் சிவக்குமார்

### மூன்றாம் பரிசு



அரியநாதன் வர்ணிகா

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## 2022 தமிழ்ப் புத்தாண்டு உணவுத் திருவிழா














தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS
# செய்தி மடல்
# தமிழ் ஊற்று

தமிழால் இணைவோம்

விஸ்கான்சின் தமிழ்ச்சங்கம்

## Wisconsin Tamil Sangam



வழங்கும்

## 20ஆம் ஆண்டு தமிழ் புத்தாண்டு சித்திரை விழா 2022

## 20th Annual WITS Tamil Newyear Celebration 2022



விஸ்கான்சின் மாகாணத்தின் உயர் அதிகாரிகள் தலைமையில் "திருவள்ளுவர் சிலை" திறப்புவிழா

The "VALLUVAR STATUE" opening ceremony Presided by Wisconsin State Delegates.

கோவாக்ஸின் புகழ் எல்லா தம்பதியரின் பாராட்டு விழா

We are extremely Overwhelmed to Honor Padma Bhushan awardee



**Justin Williams**
Regional Representative in the U.S. Senator Tammy Baldwin, Madison, Wisconsin



**Sarah Godlewski**
State Treasurer of Wisconsin.



**Gurdip Brar**
Mayor, City of Middleton, Wisconsin



**Dr. Krishna Ella**
Founder and Chairman & Managing Director Bharat Biotech, India



**Mrs. Suchitra K. Ella**
Co-Founder & Joint Managing Director Bharat Biotech, India

பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள்!!!





Date : May 14,2022
Time : 3 30PM - 6 30PM (CST)
Venue : Performing Arts Center,
James Madison Memorial High School. 201 S Gammon Rd, Madison

**FREE EVENT**





MATHNASIUM The Math Learning Center

AMBER INDIAN CUISINE
Amber INDIAN CUISINE

INDIA HOUSE
Spices, Food, Gifts
709 S. GAMMON RD
MADISON, WI-53719
Open 7 days a week

## EXECUTIVE MEMBERS

President - Bhavani Dinakaran (919) 827-6460
Vice President- Jansirani Prabakaran (608) 628-3506
Secretary - Gayathri Guru (630) 864-2257
Jt. Secretary - Rekha Rajkumar (608) 421-0379

Advisory - Raje Venkatesan (608) 609-7098
Outreach - Usha Shankar (608) 206-3009
Treasurer - Niranjani Iyer (405) 714-1397
Jt. Treasurer - Shoba Ananthanarayanan (608) 772-8819

Contact Details: Wisconsintamilsangam@gmail.com

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## தமிழ் புத்தாண்டு 2022 ஒரு கண்ணோட்டம்



தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## இயற்க்கை விவசாயம்







தோட்டக்கலையில் ஆர்வம் உள்ளவரா நீங்கள் ? இயற்கை விவசாயம் பற்றி அறிய வேண்டுமா?
உங்கள் அன்றாட உணவுக்கழிவுகளை உரமாக மாற்ற வேண்டுமா ?
இதோ உங்களுக்காக நமது மேடிசன் வாழ் திரு சங்கர் உஷா தம்பதியரின் இயற்கை விவசாய உத்திகள் சில..

1. காபி மற்றும் தேநீர் கசடுகளை இனி குப்பையில் போடாமல் தோட்டத்து மண்ணிலிடுங்கள், அவை **அவுரிநெல்லி** (Blueberries) போன்ற அமில விரும்பி தாவரங்களுக்கு அருமையான உரமாகும்
2. தினமும் சாதம் சமைப்பவரா நீங்கள்? அரிசி கழுவும் தண்ணீரை சேமித்து கருவேப்பிலைச்செடிகளுக்கு பயன்படுத்துங்கள் அதுச்செடிகளுக்கு ஒரு அருமையான உரமாகும். தயிர் மற்றும் மோர் கழுவும் தண்ணீரையும் கறிவேப்பிலைச்செடிகளுக்கு பயன்படுத்தலாம்
3. வாழைப்பழம் யாருக்குத்தான் பிடிக்காது! இனி அதன் தோலை குப்பையில் எறியாமல் வெயிலில் நன்கு உலர்த்தி (பொடியாக்கி ) மண்ணில் கலக்கவும். வாழை பொட்டாசியத்தின் மிகச்சிறந்த மூலமாகும். அதனை தண்ணீரில் 2-3 நாட்கள் ஊறவைத்து அந்தத்தண்ணீரை செடிகளுக்கு பயன்படுத்தவும்.
4. காய்கறித்தோல்கள் - குப்பையா? இல்லை இல்லவே இல்லை அவற்றை உரமாக்கி மண்ணோடு கலக்கவும்

இனி உங்கள்ச் செடிகளில் பூக்களும் கனிகளும் காய்களும் கொத்து கொத்தாய் பூத்துக்குலுங்கும். உரம் வாங்கும் கவலையின்றி இனி நீங்களும் சிரித்திடலாம் , உங்கள்ச்செடிகளும் பூவோடும் கனியோடும் காயோடும் அழகாய் சிரித்திடும்.

# WITS

## புதிய செயல்பாடுகள்

## கரம் கொடுப்போம்



## WITS weaving clinic

"தறி" யினை உயிராக்கி
"பாவு" உடம்பாக்கி
"நூல்" நரம்பாக்கி
"நெசவு" உறவாக
கொண்டு வாழும் தமிழ்நாட்டு கைத்தறி
நெசவாளர்களுக்கு தோள் கொடுத்து உதவும்.

## Adopt a Village

கிராமங்களே நாட்டின் முதுகெலும்பு
கிராம மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு
உதவும் வகையில் அந்த கிராமத்தை நாம்
தத்தெடுத்து அந்த மக்களுக்கு நம்மால்
முயன்ற உதவிகளை செய்து கொடுக்கும் முயற்சி.

## Closet Drive

மறுசுழற்சி (Recycle) பலரது வாழ்வில்
பங்கு வகிக்கிறது. நம் தமிழ்ச்சங்க
குடும்பங்களில் இருந்து அவர்களுக்கு தேவை
அற்ற உபயோகபடுத்த கூடிய துணி மற்றும்
புத்தகம், சமையல் பாத்திரம் முதலியவற்றை
சேகரித்து கிராமங்களுக்கு அனுப்பும் முயற்சி.

## (PVSA) President's Volunteer Service Award


**அமெரிக்க குடியரசு தலைவரின் தன்னார்வலர் சேவை விருது**

நாம் நம் சமூகத்திற்க்கு
வழங்கும் பெரிய பரிசு நம் நேரம். சமூகத்திற்கு
volunteering செய்வதன் மூலம் நம் வாழ்விலும்
நல்ல மாற்றுதலை உண்டாக்குவோம் சமூகத்
தொண்டாற்றும். அனைவருக்கும் கிடைக்கும்
அங்கிகராம் தான் இந்த PVSA விருது

## WITS Virtual Yoga

உங்கள் உடல் நலனை மேம்படுத்த விஸ்கான்சின்
தமிழ்சங்கத்தின் புதிய முயற்சி பெரும் வெற்றி
கண்டுள்ளது. வாரம் ஒரு முறை சனிக்கிழமை தோரும்
(காலை 9.30 மணியில் இருந்து காலை 10.30
வரை) உங்கள் இல்லம் தேடி வருகிறது மெய்நிகர்
யோகா பயிற்சி வகுப்புகள் உங்கள் பேராதரவுடன்.

# புதிர் பக்கம்




## Across

இடமிருந்து வலம்

1.விஸ்கான்சின் தமிழ்ச்சங்கத்தின் முதல் தலைவர்

3.கோலார் சுரங்கத்தில் கிடைப்பது

4.விஸ்கான்சின் தமிழ்ச்சங்கத்தின் முன்னால் தலைவர்
இவர் பெயரில் ஒரு பாடகரும் உண்டு

5.முத்தமிழில் ஒன்று

6.இது ஒரு முக்கிய தொடர்பு ஊடகம்

7.அடிக்கடி - தமிழ்ச்சொல்

8.குழந்தைகள் கேட்க விரும்புவது

## Down

மேலிருந்து கீழ்

1.உரலுக்கு ஒரு பக்கம் இடி ; இதற்கு இரண்டு பக்கமும் இடி

2.Solid - தமிழ்ச்சொல்

5.மேடிசன் வாழ் இந்தியர்களால் கொண்டாடப்படுவது

6.மேடிசன் ஏரிகளுள் ஒன்று


7.Farmers Market - நம்ம ஊர்ல-

9.வட அமெரிக்க தமிழ் பேரவையின் இயக்குனர் குழுவில்
ஒரு மேடிசன் தமிழச்சி

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று







| Age / Award Category | Bronze | Silver | Gold |
|---|---|---|---|
| Kids (5-10 Y) | 26-49 | 50-74 | 75+ |
| Teens (11 - 15 Y) | 50-74 | 75-99 | 100+ |
| Young Adults (16 - 25 Y) | 100-174 | 175-249 | 250+ |
| Adults (26+) | 100-249 | 250-499 | 500+ |









# எங்கள் கொடைவள்ளல்களுக்கு ஒரு பெரிய நன்றி

Amber INDIAN CUISINE

ISR Info Way

Vennsys LLC
Virtual Solutions To Your Software Needs

INDIA HOUSE
Spices, Food, Gifts
709 S. GAMMON RD
MADISON, WI-53719
Open 7 days a week
PH:608-268-0240/843-4903

MATHNASIUM
The Math Learning Center

Where IT is done right...
TECHNOVIZ

ADAMINFOTECH
Business Technology Consulting

symphony

State Farm

Genome INTERNATIONAL

திரு.அனந்த பாலிகா

திருமதி.சுஜாதா பாலிகா

திருமதி.மீனாட்சி கணேசன்

திரு.ஸ்வாமிநாத் ராஜகோபாலன்

திருமதி.சுகந்தா

திருமதி.வனித்தா சுரேஷ்

திரு.Dr.S.பாலச்சந்திரன்

திருமதி.லலிதா பாலச்சந்திரன்

திருமதி.விஜி சிவக்குமார்

திருமதி.நித்யா ஹரிஹரன்

திரு.கொர்னெலியஸ் சுகுமார் ரத்னம்

Sangamam

MGE
Madison Gas and Electric

தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**உஷா சங்கர்**
**மே 06**



**மஞ்சுளா மணிவண்ணன் - ஏப்ரல் 16**
**தேஜஸ்வினி மணிவண்ணன் - ஏப்ரல் 15**



**ரிவேக்கா ரத்னம்**
**ஜீன் 29**



**சந்திரசேகர் சிங் & சரிதா சிங்**
**திருமண விழா - 18 ஏப்ரல்**



**நிவேதிதா பிரபாகரன் - ஜீன் 2**



**பவானி தினகரன்**
**ஏப்ரல் 30**



**ராஜேஷ் கிருபானந்தம்**
**ஏப்ரல் 30**



**ப்ரவீன்குமார் ரவிக்குமார்**
**ஜீன் 01**


தமிழா இணைவோம்!! தமிழால் இணைவோம்!!

# WITS செய்தி மடல்

# தமிழ் ஊற்று

## புதிர் பக்கத்தின் விடைகள்

1.மகேந்திரன்
3.தங்கம்
4.மனோ
6.மொழி
7.உடன்
8.கதை
5.இசை



1.மத்தளம்
2.திடம்
5.இந்தியா டே
6.மொனோனா
7.உழவர் சந்தை
9.ஜான்சிராணி

| | |
|---|---|
| உங்கள் சாதனைகள் | கவிதைகள் |
| உற்றார் பிறந்தநாள் | வண்ண ஓவியங்கள் |
| திருமணநாள் வாழ்த்து | புதிர்பக்கங்கள் |
| நமது வட்டாரச் செய்திகள் | சமையல் குறிப்புகள் |
| சிறுகதைகள் | பாட்டி வைத்தியங்கள் |

அழகு குறிப்புகள் | உங்கள் தொழில் விளம்பரங்கள் | உங்கள் குழந்தைகளின் படைப்புகள்

உங்கள் பதிவுகள் எங்கள் செய்திமடலில் இடம்பெற, நமது செய்திமடல் பற்றிய உங்கள் கருத்துக்களை பகிர்ந்திட இன்றே இணைந்திடுங்கள் மின்னல் வேகத்தில் மின்னஞ்சல் மூலம்.

அனுப்ப வேண்டிய முகவரி: wisconsintamilsangam@gmail.com

நமது செய்திமடலுக்கு "தமிழ் ஊற்று" என்ற அழகு பெயர் சூட்டிய திரு.கொர்நெலியஸ் சுகுமார் அவர்களுக்கு நமது நன்றி.